புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

விரோதி௵ (1889) ஆவணிமீ உஅ௳ ஸ்தாபனமானது.

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிகை கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு | ரு. | 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரு. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரு. | 9-40 |
| தனிப்பிரதி: | சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | ரு. | 9-40 |
| ,, அரைக்கலம் | ரு. | 5-00 |
| ,, கால்கலம் | ரு. | 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ. } யாழ்ப்பாணம்:—குரோதன௵ கார்த்திகைமீ கரு௳; (1925 நவம்பர் 30) திங்கட்கிழமை. { இலக்கம்—சஉ

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா னுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தந் தினிது னூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புவாக வேலைமுடித்த முரசுகுத்தி செங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப், ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 41.)

## இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசு குத்தி செங்காதரக் கொடி, கைக் கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கல்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அன கோ.,
சருப் ஜவுளி வியாபரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (துலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது.

(Y. 47.)

## சாலர்மிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலந்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால் ரூத்தலுக்கு ரூபா ரு தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாதிருப முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டிக்களப்பு,
சிலோன்.

(M. 30.)

## வீ. ஸாமி. அய்யங்காருடைய அறைக்கீரைவிதைத் தைலம்.



பித்த மேகரோனது சிரசுக்கேற அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புங்கச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினூல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுகிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும் இந்த கோட்டையில் காணப்படாத சமுத்திரத்துமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுத்தம் மாறாது அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

'விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை. விபரம் எழுதிக்கேட்கவும்.'

ஐங்கரபகந்தம்மாள்,
8 நம், பிராமன்ஸ் ரோட்
மைலாப்பூர், சென்னை.

(Q. 67.)

ESTABLISHED, 1909.

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** *(South Arcot Dt; India.)*

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

கண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசவாசர்களுக்கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால நிலைமைக்கேற்றாப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை பூசமுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்துவீர்களாக.

**இதுவே அசல் பாகமுள்ளது!** **ஒருவருமிகழ்ந்து பேசாதது !!**

உத்திரவாதமுள்ள

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

☞ இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறையாது இல்லறத்தின் இன்ப வாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் கீர்த்திவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்வில்லாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனுக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கிறோம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

**ஷை லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாதபித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு எழுவகை தாதுக்களின் ஹீனம் அஸ்தி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர் ... பெருத்தல் ஆகிய நோய்களையும் நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், ... ாபங்கம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி. பி. தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினால் வி. பி. செலவு இனாமாயனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருந்தின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை ஊர்களுக்கு நிண்ணமாய் வி. பி, யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியன சத்தால் செய்யப்படவில்லை யென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றாவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறிக்கொண்டு பத்திரிகை வாயிலாய் வெளியிட்ட இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றாவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினாலாவது, கடவுளுக்குப் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ. 1000 இனாமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனாமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினால் கோர்ட்டு மூலமாகவசூல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—
Tel. Address:—
**Kader Brothers**
PORTO-NOVO

மெஸ்ஸர்ஸ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னாற்காடு ஜில்லா.

(Y. 38.)

## ஒற்றுமை.

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் தமிழ்மொழி வளர்ச்சி கருதி வரும் மாதப்பத்திரிகை 'ஒற்றுமை'க்கு 6-வது வருடம் நவம்பர்மாதம் பிறக்கப்போகிறது. மாதிரிப் பிரதி இனாம் வருடசந்தா உள்நாடு ரூபா 1. வெளிநாடு ரூபா 1½. ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன். 'ஒற்றுமை' ஆபீஸ்,
சைதாப்பேட்டை, மதராஸ்.

(H 43.)

**சமையல் சௌக்கியம்.**

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கும்.

## ருக்குமணி குக்கர்.

சமையல் அடுக்கை உபயோகிப்பவர்களுக்கே உண்டு முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33 க் கிடைக்கும் தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயபுரம் (2) சென்னபட்டினம்.

(Y. 45)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுண்பேட்டு, இன்னும் பலமாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிஷறல் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சி. அ வேணுகோபால்செட்டியார
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: குரோதன ஹூ கார்த்திகைமீ ௨௩-ம் உ திங்கட்கிழமை.


## தெருவீதியில் நிற்கும் நிழன்மரங்களை வெட்டுதல் நீதியாகுமா?

தெருவீதி மார்க்கமாக மத்தியானத்தில் நடந்துசெல்வோர் இளைப்பாறுதற்காக நிழன் மரங்களை நாட்டி வளர்த்தல் முப்பத்திரண்டு பழைய தருமங்களில் ஒன்றாகும். இத்தருமங்கள் பூர்வகாலத்திலே பிரதானமாக அரசினாலேயே வளர்க்கப்பட்டு வந்தனவென்பது புராணேதிகாசங்களைப் படிப்போர்க்கு இனிது புலனாகும். "நல்லோர் வகுத்த முறையாம் அறங்கள் நாலெட்டில் ஒன்று குறையேம்" எனச் சந்திரவதி கூற்றாக அரிச்சந்திர புராணத்திற் கூறப்பட்டிருத்தலையும் நோக்குக. இலங்கையைப் பரிபாலித்த பறங்கியர் ஒல்லாந்தர்தாமும் தெருவீதியில் நிழன்மரத்தை வைத்து வளர்த்துப் பிரயாணிகட்கு நிழலைச் செய்தலாகிய பெரும் புண்ணியத்தை ஆற்றிவந்தார்கள். இலங்கை ஆங்கிலர் கைப்பட்டபின்னரும் வடமாகாணத் தலைமை உத்தியோகத்தர்களாகவிருந்த டைக்துரை துவைனம் முதலியோரும் அவர்களுக்குப் பின்னிருந்த மாகாணத் தலைவர்களும் தெருவீதிகளில் நிழன்மரங்களை வைப்பித்து வளர்த்துவந்தார்கள். "வெவ்வெயில் வருத்தமுற்றோர் மென்னிழல் விரும்புமா போல்" எனத் திருவாதவூரடிகள் புராணத்திற் கூறியாங்கு, தூரித்த இடங்களிலிருந்து கடும் வெயில்காலத்து நடந்துவரும் ஏழைப் பிரயாணிகள் இந்த மர நிழலின்கீழ்ச் சிறிது தங்கி இளைப்பாறி வழிநடந்த ஆயாசந் தீர்த்துக்கொண்டு பின்னரும் அப்பாற் செல்லுவார்கள்.

இங்ஙனமெல்லாமிருப்ப, சென்ற சில நாட்களாக, பகிரங்கவேலைப் பகுதியார் ஈனம் இரக்கம் தயவு தாட்சிண்யம் என்னுமிவைகளொன்றுமின்றி இங்குள்ள பிரசித்த தெருவீதிகளின் ஓரமாக நிற்கும் நிழல் விருட்சங்களையெல்லாம் கேட்கக் கேள்வியின்றிக் கண்டபடி வெட்டித் தறித்து வீழ்த்திக் குவித்துவருகின்றார்கள். இங்ஙனம் வெட்டி வீழ்த்தித் தெருவீதியை "ஓ" என்று வெளியாக்கிவிடுதற்குக் காரண மென்னவென்று கேட்டால் மழைபெய்யுங்காலத்திலே மரங்களிலிருந்து சின்னீர் வீழ்ந்து தெருவீதியை அரித்துப் பள்ளப்படுத்திவிட அதனாற் பகிரங்கப்பகுதியாருக்குப் பெருஞ் செலவுண்டாகின்றதாம். நிழன்மரங்களைத் தறித்து வீழ்த்துவதற்கு அவர்கள் சொல்லும் பிரதானமான நியாயம் இஃதொன்றேயாம். பகிரங்கப்பகுதியார் சொல்ல வெட்கப்பட்டு வெளிவிடாத இன்னொரு காரணத்தை அவர்களுக்காக யாம் வெளியிடுதல் குற்றமாகாது. அக்காரணம் என்னையெனின், தெருவோரத்திலுள்ள மரங்களில் நின்றும் வீழ்ந்த சின்னீரால் தெருவீதி இடையிடையே பள்ளமாய்விட, அத்தெருவீதிவழியே மோட்டாரதஞ் செல்ல, அதன் சில்கள் அப்பள்ளங்களில் உருளும்போது மோட்டாரதத்திலிருக்கும் துரைமக்கள் அசைவற்றதென்று நினைத்திருக்கும் தங்களுடைய உடம்பு சிறிது அசைவதனால், அசைவறவிருந்த அப்பிரபுக்களின் முதுகு பிற்புறத்துள்ள மெத்தையில் முட்டிச் சிறிது சரீரசிரமத்தை உண்டாக்கிவிடுகின்றதென்பதேயாம். இந்த நியாயத்தைப் பகிரங்கப்பகுதி அதிகாரிகள் ஒத்துக்கொள்வரோவென்பது சந்தேகம் நிற்க,

பகிரங்கப்பகுதியார் மரங்களைத் தறித்தற்கு அநுகூலமாகச் சொல்லும் நியாயம் அவைகளிலிருந்து சின்னீர்வீழ்ந்து தெருவீதியை இடையிடையே குழிப்படுத்திவிட அதனாற் தெருவீதியைச் செப்பனிடுதற்குப் பொருட் செலவுண்டாகின்றதென்ற வொன்றுமேயாம். இந்த ஒரு காரணம் மாத்திரம் பற்றி மரங்களை வெட்டுவதனால் வரும் எண்ணிறந்த தீமைகளுட் பிரதானமான சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டுகின்றேம்.

1. மலைவளம் நதிவளமில்லாத உஷ்ண பூமியாகிய யாழ்ப்பாணத்திலே மோட்டாரதங்கள் மார்க்கமாகவும் மற்றும் வண்டிகள் மார்க்கமாகவுஞ் செல்பவர்களைக்காட்டிலும், நடந்துசெல்லும் ஆண்களும் பெருஞ் சுமைகளைச்சுமந்துசெல்லும்பெண்களுமே தொகையில் அதிகமாவர். தை, மாசி, பங்குனி, சித்திரை, ஆடி, ஆவணியென்னும் வெயிலுகோரம் அதிகமாகவுள்ள காலத்தில் பாதசாரிகளாகச்செல்லும் இவர்களுக்குப் பெரும் நிழலைக் கொடுப்பது இந்த மரங்களேயாம்.

2. இந்நுள்ள பெண்கள் குடைபிடித்தல் பாதரட்சையிடுதல் என்னுமிவ்வழக்கமில்லாதவர்கள். இம்மரங்களில்லையேல் இவ்வேழைப் பெண்கள் சிரசாதிகேசம் வரையிற் கொடிய வெயிலிற் சுட, புழுக்களைப் போல் துடித்துப் பதைத்துக் கொண்டுதான் இத்தெருவீதி வழியே செல்லவேண்டி நேரிடும்.

3. மோட்டாரதங்களின் சஞ்சாரம் மிக அதிகப்பட்டுள்ள இக்காலத்திலே, தெருவீதிகளிலிருந்து எழும் புழுதிப்படலம் தெருவோரத்துள்ளவர்களின் வீடுகளுட்புகுந்து ஆங்குவசிப்பவர்களுடைய சுவாசத்தோடு உட்சென்று உடம்பிற் செறிந்து க்ஷயரோகம் முதலிய நோய்களை அவர்களுக்கு உண்டாக்க, அவ்வண்ணம் அப்புழுதிப்படலங்களைத் தெருவீதியில் நிற்கும் விருட்சங்கள் இயன்றவரையும் தடுத்துக்கொள்ளுகின்றன.

4. விருட்சங்கள் எப்பொழுதும் மனுஷர் வெளியே சுவாசிக்கும் நச்சுக்காற்றைத் தாங்கள் கிரகித்துக்கொண்டு சுத்தமான காற்றை மனுஷருக்குக் கொடுக்குமியல்புடையன வென்று தத்துவசாஸ்திரிகள் கூறுவர். ஆதலால் மனுஷசஞ்சாரம் அதிகமாகவுள்ள தெருவோரங்களில் மரங்கள் நிற்றல் சுகாதாரத்திற்குப் பெரும் ஏதுவாகும்.

5. வேப்பமரங்கள் காட்டுக் காய்ச்சலைத் தடுக்குமியல்பினவென்றும், மலைச்சுரமுள்ள விடங்களிலும் சனசஞ்சாரமதிகமானவிடங்களிலும் வேப்பமரங்களை வைத்து உண்டாக்குதல்வேண்டுமென்றும் ஆங்கிலவைத்தியர்களுந் தமிழ் வைத்தியர்களும் கூற, அதனைப் பொருட்படுத்தாது மலைச்சுரம் பரவிவரும் இவ்வூரில், பகிரங்கப்பகுதியார் தெருவோரமாக நிற்கும் வேப்பமரங்களைக் துணுக்கே தறித்து வீழ்த்திவிடுகின்றனர்.

6. உயர்ந்த மரங்கள் மழை முகிலைத் தம்மிடத்திற்கு இழுத்து மழையைப் பெய்விக்கும் ஆற்றலுடையனவென்று தத்துவசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். அவ்வாறயின் கார்முகிலைக் கவரும் மலையில்லாத நாடாகிய யாழ்ப்பாணத்திலே மிக உயர்ந்த பழைய புளி அரசு முதலிய மரங்களை வெட்டிவிடுதல் புத்தியீனமல்லவா!

7. மரங்கள் நகரத்திற்குப் பேரழகையும் கண்ணிற்குக் குளிர்ச்சியையுந் தருமியல்பினவாம். சீதளதேசத்திலே வசிப்பவர்கள் தாமும் மரங்களை வைத்துண்டாக்க, உஷ்ண தேசமாகிய யாழ்ப்பாணத்தில் மரங்களைத் தறித்துவிடின் யாழ்ப்பாணம் பழையபடி மணற்றிடராக மாறவேண்டியதன்றோ நேரிடும்.

8. மோட்டாரதங்கள் வாயிலாகவும் துரகதம் மாட்டுவண்டி 'றிக்ஷோ' என்னுமிவைகள்வாயிலாகவும் பிரயாணஞ்செய்வோர்க்குத்தாமும் மர நிழல் தேவையில்லையோவென ஆராய்ந்து பார்ப்போம். இந்த வண்டிகள் மார்க்கமாகச் செல்வோர் தங் கருமமாக தெருவோரத்துள்ள வீட்டிற்புகும் போது இவர்கள் ஏறிவந்த வண்டிகளும் அவைகளையோட்டும் மனுஷரும் இழுத்துச் செல்லும் மிருகங்களும் வெயிற்காலத்து தெருவோரத்தில் நிழன்மரங்களில்லையேல் ஒதுங்கிநிற்பது எங்கே? இத்தனை மைல் தூரமென்று காட்டுவதற்காகப் பகிரங்கப் பகுதியார் நாட்டியிருக்கும் கல்லுகளுக்குக் கீழா இவர்கள் ஒதுங்கி நிற்பது; இலைகள் அடர்ந்து கிளைகள் செறிந்து கொம்பர்கள் பரந்த புளி முதலாம் மரங்கள் சிறு மழைக்குப் பிரயாணிகள் ஒதுங்குவதற்கு இடங் கொடுக்கின்ற வென்பதை மழைச்சட்டை போட்டுக் கொண்டு திரியும் பகிரங்கப்பகுதி உத்தியோகத்தர் எங்ஙனம் அறிவர்?

9. கச்சநகரிலுள்ள தெருக்களிலே பாதசாரிகள் நிழன் மரங்களில்லாது வருந்துவதைக் கண்ட மகாத்மாகாந்தி நிழன்மரங்களை நாட்டுவதிற்றலையிட்டிருக்கின்றார். அம் மரங்களை வளர்ப்பதற்கு ஓர் சங்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

மேலே சொல்லப்பட்ட நன்மைகளும் இங்கே சொல்லப்படாத இன்னும் பல நன்மைகளும் தெருவீதியிலுள்ள மரங்களினால் அடையத்தக்கனவாகவிருப்ப, சின்னீர் வீழ்ந்து தெருவீதியைப் பள்ளப்படுத்திவிடுகின்றதென்ற ஒரு பொருந்தாத நியாயங் கொண்டு மரங்களைப் பகிரங்கப்பகுதியார் தறித்து அழித்துவிடுதல் எத்துணை மதியீனமாகும்! இக்காலத்திலே மோட்டரதங்களும் "பஸ்" களும் தெருவீதிகளை உழுது கொண்டு இடையீடின்றிச் செல்வதனால் தெருவீதிகளிற் குழிகள் உண்டாவதே உண்மையாகவிருப்ப, அதனை யொழித்து, மரங்கள் சின்னீர் சிந்துவதனாலே தெருவீதிகளிற் பள்ளங்கள் உண்டாகின்றனவென்று சொல்லுதல் பிட்டத்தில் அடிக்கப் பல்லுதிர்ந்ததென்றவாறு அசம்பாவிதமாகும். தெருவில் மரங்களின் சின்னீர் விழாத எத்தனையோ இடங்களிலே வற்றுத கீறிலைகள் காணப்படுகின்றனவே. அதற்கென் செய்வது?

தெருவீதிகளில் மரங்கள் நிற்பதனாற் சின்னீர் வீழ்ந்து குழிகளுண்டாக, அதனாற் பகிரங்கப்பகுதியாருக்குச் சிறிது பொருட்செலவு ஏற்படுகின்றதென்றுதான் வைத்துக்கொள்வோம். இங்ஙனம் மேலதிகமாக வரும் செலவிற்காகவுள்ள பணத்தைப் பகிரங்கப் பகுதியார் தங்கள் சொந்தவீட்டுப்பணத்தையெடுத்துக்கொண்டு வந்து செலவிடுகின்றார்களா? ஊரவர்களாயுள்ளவர்கள் தங்கள் வசதியின்பொருட்டுக் கொடுக்கும்வரிப்பணத்தையெடுத்துத்தானே செலவிடுகின்றனர். பிரயாணிகளுக்குத் தெருவீதி எத்துணை ஆவசியகமோ, எத்துணைவசதியோ, அவ்வாறே தெருவீதிகளில் நிற்கும் நிழன் மரங்களும் அத்துணை ஆவசியகமாகவும் வசதியாகவும் உள்ளனவாம். தெருவீதிகளின் நிழன்மரங்கள் நிற்றலால் வரும் மேலதிகமான செலவு எவ்வளவென்பதைப் பகிரங்கப்பகுதியார் வரியிறுக்கும் ஊரவர்களுக்கு எடுத்துக்காட்டுதல்வேண்டும். இவர்கள் நிழன் மரங்களை வெட்டாவண்ணம் ஊரவர்கள் காலதாமசமின்றி ஓர்மகாநாகூட்டி இவர்கள் செயலை எங்கள் வடமாகாணத்தலைவருக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும். "கறந்தபால் முலைக்கேறுவதில்லை" யென்றவாறு நிழன் மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டபின் ஊரவர்கள் ஓலமிடுவதால் வரும்பயன் யாதுமில்லையாம். நமது பட்டினபரிபாலனசக்கத்தார் இவ்விஷயத்திற் பகிரங்கவேலைப்பகுதியாரைப் பின்பற்றாதிருப்பதையிட்டு அவர்களுக்கு நன்றி கூறுகின்றேம்.

## தபாற்கந்தோர்ப்பகுதியாரின் 1924-ம் வருட அறிக்கைப் பத்திரம்

தபாற்கந்தோர்த் தலைவரது 1924-ம் வருட அறிக்கைப்பத்திரம் வெளிவந்திருக்கிறது. அதில் விசேஷமாகக் கவனிக்கத்தக்கது இலங்கையிலுள்ள தபாற்கந்தோர்களில் பெரும்பான்மையானவை இடவசதியில்லாதிருப்பன என்பதேயாம். இந்த விஷயமாக மேற் பகுதித் தலைவர் பின்வருமாறு கூறுகின்றார்:—

"பிரதானமாயுள்ள தபாற்கந்தோர்களிற் பெரும்பான்மையானவை தக்கவாறு கருமம் பார்ப்பதற்கு வசதியின்றியும் போதாமையும் இருக்கின்றன, இதனால் அவ்வவ் ஸ்தானங்களிற் செய்யப்படும் வேலைகள் கிரமமின்றியும் காலந்தாழ்த்தும் முடிகின்றன. இப்பொழுது தபாற்கந்தோர்க்கருமங்கள் நடைபெறுங்கட்டிடங்களுள் நூற்றுக்கு எழுபதுக்குவிகிதமானவை ஊரவர்களிடம் குத்தகையாக ஒருகுறித்தகாலத்துக்குப் பெற்றுக்கொண்டனவாகும். அவை தபாற்கந்தோர்ப்பகுதியாருடைய தேவைக்குப்பெரும்பான்மையும் பொருத்தமில்லாதிருக்கின்றன. சொந்தக்காரர் அக்கட்டிடங்களை வேண்டியகாலங்களில் தவறாது பழுதுபார்ப்பதுமில்லை. இதனால் கடமை பார்க்கும் நேரத்தின் ஒருபாகத்தைத் தவ்வக்கட்டிடச் சொந்தக்காரருக்குக் கடிதம் எழுதுவதிற் செலவிட வேண்டியிருக்கிறது. வாடகைக்கொடுத்துப் பெறும் கட்டிடம் ஒருபோதும் திருப்தியாக மாட்டாது. கட்டிடம் தக்கதாக ஒரு மத்தியஸ்தானத்திற் சனங்களுடைய வசதிக்கேற்ப அமைக்கப்பட்டிருப்பின் அது பெரும்பாலும் கருமம் விருத்தியடைவதற்கு மார்க்கமாகும்.

சனங்களை மழை வெய்யில் என்னுமிவற்றினின்று காப்பாற்றும்பொருட்டுத் தபாற்கந்தோர்க் கட்டிட முகப்பில் ஓர் சாலையேனும் மண்டபமேனும் இருத்தல் வேண்டும். அன்றியுஞ் சனங்கள் கஷ்டமின்றியும் நெருக்கமின்றியும் வசதியாகக் கருமம் பார்க்கும் பொருட்டு நீளமும் அகலமுமுள்ள "கவுன்டர்" எனப்படும் மேசையும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு தபாற்கந்தோர்க் கட்டிடமும் அரசினருக்கு உரியதாயிருத்தல் வேண்டும். அவை இக்கால முறைக்கு ஏற்றதாயும் சனங்களுக்கு அதிக வசதியுள்ளதாயும் மத்திய ஸ்தானத்தில் இருத்தல் வேண்டும்.

இனி, பட்டினங்களிலுள்ள தபாற்கந்தோர்களுக்கு அதிக சமீபத்திலே கந்தோர்த் தலைவருக்கு உதவியாகக் கடமைபார்க்கும் உத்தியோகத்தருக்கும் அரசினர் வீடுகள் அமைத்துக்கொடுத்தல் வேண்டும். பட்டினங்களில் வசதியான வீடுகள் கிடைத்தல் அரிது. அதனால் உதவி உத்தியோகத்தர் தூரத்தில் வசிக்கவேண்டியிருக்கிறது. தபாற் கந்தோர்க் கருமங்கள் செவ்வனே நடைபெறுவதற்கு இதுவும் பெரும் தடையாயிருக்கிறது." என்பனவும் பிறவுமாம்.

இலங்கையிலே தபாற்கந்தோர்ப்பகுதி காலந்தோறும் விருத்தியடைந்துவருகின்றது. இப்பொழுது அநேக இடங்களில் புதியதபாற்கந்தோர்களும் உபதபாற்கந்தோர்களும் தபால் ஏற்கும் கந்தோர்களும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. முன்னர் உள்நாட்டுத் தந்திச்சமாசாரங்களுக்கு இருபத்தைந்து சதம் விதிக்கப்பட்டிருந்தது. அதாவது எட்டுச் சொற்களுக்கு இருபத்தைந்து சதம்; விலாசம் எத்தனை சொற்களாயினும் கிரயமில்லை. அதன் பின் தபாற்கந்தோர்ப்பகுதியார்ஊரவர்கள் மீது கொண்ட கருணையினாற்போலும் பத்துச்சொற்களுக்கு இருபத்தைந்துசதமாக்கினர். இது ஓர் கண்கட்டுவித்தையாகும். அத்துடன் விலாசத்துக்கும் கிரயம் விதித்தனர். தந்திச்சமாசாரம் அனுப்புவோர் தாம் அனுப்பும் செய்தியையே பிரதானமாகக் குறிக்கும் நோக்கமுடையரன்றி விலாசத்தை அதிகப்படுத்த ஒருபோதும் மனங்கொள்ளார். இதனாலே, பிரசித்தமாயுள்ள ஒருவருக்கு அனுப்பப்படும் தந்தியன்றிச் சாதாரணமாயுள்ளார்களுக்கு அனுப்பப்படும் தந்திகள் பெரும்பாலும் பலவிதத்திலும் அலட்சியம் செய்யப்படுகின்றன; ஒருவாறு கொடுக்கப்படினும் அதிக சிரமப்பட்டபின்னரே விலாசமிடப்பட்டவரை அடைகின்றன. முன்னர், விலாசம் இடப்பட்டவர் குறித்த இடத்தில் இல்லையாயின், அவர்சென்றஇடத்துக்குத் தந்திகள் கிரயமின்றி அனுப்பப்பட்டுவந்தன. இந்தமுறையும் பின்னர் இல்லாது ஒழிந்தது. உதாரணமாகக் கண்டியிலிருந்து, கந்தையா என்னும் ஒருவர் மன்னாரிலுள்ள வேலுப்பிள்ளை என்னும் ஒருவருக்கு அனுப்பிய தந்தி அவர் அங்கில்லாமையினாற் கொடுபடாதாயின் குறித்த தந்திச் சேவகன் மன்னார்த்தந்திக் கந்தோர் அதிபரிடம் விலாசக்காரன் அங்கில்லையென முறையிடுகின்றான். குறித்த உத்தியோகத்தர் இச்சமாசாரத்தைக்கண்டிக்குத் தெரிவிக்கின்றார். கண்டியிலுள்ள தந்திக்கந்தோரதிபர் தந்தி கொடுபடவில்லையென்றும் சமாசாரத்தைக் குறித்த கந்தையாவுக்குத் தெரிவிக்க முயன்று தமது சேவகனை அனுப்புகின்றார். சேவகன் அன்றோ அடுத்த காலோ அல்லது மூன்றும் நாளோ அதிக கஷ்டத்துடன் கந்தையாவைத்தேடிப்பிடித்துவிஷயத்தைத் தெரிவிக்கின்றான் இக்கஷ்டத்தைக்காட்டிலும் குறித்த வேலுப்பிள்ளை சென்றுள்ள இடத்தை விசாரித்துத் தந்தியை அவ்விடத்துக்கு அனுப்பிவிட்டாற் சிரமமுமில்லையாம். சேவகனின் நேரமும் வீணாகாது. தந்தியும் பிரயோசனப்படும். அதிகாரிகள் விலாசத்துக்கும் கிரயம் விதித்தமையினாலேதான் தந்தியனுப்புவோர் கூடியவரையில் விலாசத்தைச் சுருக்குகின்றனர்.

அதன்பின் மகாயுத்தம் ஆரம்பமாக, "எரியும் கொள்ளியை ஏறத்தள்ளுவது போல்" அதிகாரிகள் மீளவும் பதினைந்து சதம் கூட்டி ஒருதந்திச்சமாசாரம் அனுப்புவதற்கு நாற்பது சதம் விதித்தனர் ஐந்து சதமுத்திரை இடப்படும் தபாலுக்கு ஆறுசதமுத்திரை விதித்தனர்; இரண்டு சதமுத்திரையுள்ள "போஸ்காட்"டை மூன்று சதமாக்கினர். யுத்தம் முடிந்து பலவருடங்களாயின. இக்கவிதங்களில் ஒரு சிறிதளவேனும் குறைப்பதற்கு இப்பகுதியார் சிந்தித்திலர்; எங்கள் குறைமுறைகளை அரசினருக்கு எடுத்துக் கூறுவதற்குத் தகுந்தவர்கள் இவர்களே என்று நாங்கள்தெரிந்தனுப்பிய அவர்களும் எண்ணினாரல்லர். சிந்திக்குமிடத்துப் பின்னரும் ஓர் யுத்தம் ஆரம்பமாகுமாயின் இப்பொழுதிருக்கும் கிரயந்தானும் இருமடங்கு அதிகமாகுமென்றே அஞ்ச வேண்டியிருக்கிறது. அதிகப்படுத்தப் பட்ட கிரய விகிதங்களால் இப்பொழுது தபாற்கந்தோர்ப் பகுதியாருக்கு அதிக தொகையான பணம் முன்னரைக்காட்டிலும் எஞ்சியிருக்கிறது. ஆகவே இந்த விகிதங்களைக் குறைத்து முன்னர் விதிக்கப்பட்டுள்ள விகிதங்களை அனுசரிப்பதற்குப் பணவாசை ஒன்றன்றி வேறு தடையாதுமில்லையென்பது நன்கு புலப்படுகின்றது. அதிகப்படுத்திய விகிதத்தை அதிக லாபம் கிடைக்கும் காலத்திலே குறைப்பதிற் கஷ்டம் சிறிதுமில்லை. முறைமையும் அதுவேயாகும்.


## விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 20049-ம் இலக்க வழக்கில் 1925-ம் ஹூ ஐப்பசிமீ 16-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1925-ம் ஹூ மார்கழி மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

வட்டுக்கோட்டை 1. யாழ்ப்பாணக்கல்லூரிக் காரியதரிசி சங்கத்தவர்களும,

உடுவில் 2. இலங்கை அமெரிக்கன் மிஷன் தனாதிகாரி றெவறன் W. E. கிச்சுகொக் வழக்காளிகள்.

வண் கிழக்கு 1. முத்தையா ஆசைப்பிள்ளையும் மறுபேரும் எதிராளிகள்.

வண்ணார்பண்ணை கிழக்கிறை "இக்கிரி தோட்டம் பா. கில. இலா. 10¾ கல்வீடும் மற்றும் கட்டிடங்களும் கிணறும் மற்றும் இதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கும் தெற்கும் றோட்டு, வடக்கு இராசதுரை சந்திரசேகரம்பெண் நாகரத்தினத்தின் ஆதம், மேற்கு உவெஸ்லியன் மிஷனின் ஆதனம்.

யாழ்ப்பாணம், 23—11—25. (Mis. 758)

B. Emmanuel, கொம்மிஷனர்.


## தானவரவு.

வண்ணார்பண்ணை நீர்வாவியடி ஸ்ரீ. ஆ. மயில்வாகனமவர்கள், தமது மகன் கனகசபை என்பவரின் அபரக்கிரியையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா மூன்று பெற்றும்.

### புதிய நபாற் கந்தோர்.

அச்சுவேலியில் ஓர் புதிய தபாற்கந்தோர் அமைக்கப்பட்டிருக்கிறது. நாளை தொடக்கம் தபாற்கந்தோர்க் கருமங்கள் அங்கு நடைபெறும்.

### மகாத்மா காந்தி.

சமர்மதிஆச்சிரமத்தில் நிகழ்ந்த ஏதோ ஒழுங்கீனங்காரணமாக, மகாத்மா காந்தி சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஏழுநாள் உபவாசம் அனுஷ்டிக்கின்றார்.

### மேல்நாட்டில் வெள்ளப் பிரவாகம்

அதென்ஸில் அதிகவெள்ளப்பிரவாகம் உண்டாயது. அநேகர் இறந்தனரெனச் சொல்லப்படுகிறது. பழையகாலத்துள்ள கல்லறைகள் வெள்ளத்தினால் அரித்துப் பெயர்க்கப்பட்டன.

### துப்பாக்கி விபத்து.

சென்ற செவ்வாய்க்கிழமை கல்கத்தாவிலே சைநியத்தைச்சேர்ந்த ஐம்பதுபேர் துப்பாக்கிப்பிரயோகம் பயின்றபோது மிஸ்டர் லோகான் என்னுமொருவருடைய முகத்திற் சன்னங்கள் பாய்ந்தன. அவர் உடனே இறந்தனர்.

### மரணத் தீர்ப்பு.

சில மாதங்களுக்குமுன் கொழும்பிலே அப்துல்ஹமீட் என்னும் ஒரு பொலிஸ்காரனைக் கொலைசெய்த சைமன் என்பவன் சென்ற திங்கட்கிழமை அங்குள்ள சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்றான்.

### காரைநகர்ச் சைவமகாசபை.

இச்சபையின் ஆதரவின்கீழ் நிகழும் குரோதன்ஹூ கார்த்திகை மீ 6உ (21-11-25) சனிக்கிழமை பிற்பகல் நாலுமணியளவில்மேற்படி சபாமண்டபத்திலே சபை ஆசிரியர் ஸ்ரீமதி சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் விளக்கீடு என்னும் விஷயமாக ஓர் சிறந்த உபந்நியாசஞ் செய்யப்பெற்றது.

### காலிமீனாட்சிசுந்தரேஸ்வரர்கோயில் மகாகும்பாபிஷேகம்.

சென்ற வியாழக்கிழமை காலை ஏழே முக்கால் மணிக்குப் பின் நிகழ்ந்த புண்ணிய சுபதினத்திலே ஷை ஆலயத்தில் சிவகாமசௌந்தரிசமேத குஞ்சிதபாத நடராசப் பெருமானுக்கும் சமயகுரவர் நால்வருக்கும் மகா கும்பாபிஷேகம் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

### பரீட்சைப் பத்திரக் களவு.

சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையிலே சமீபத்தில் நடைபெற்ற பரீட்சைக்குரிய பத்திரங்களை, அங்குக் கடமைபார்க்குஞ் சேவகன் ஒருவன் இருமாணவரிடம் 150ரூ பாபரிதானம்பெற்றுக்கொண்டுதிருடி அம்மாணவர்களுக்குக் கொடுத்தான். களவு விஷயம் வெளியானதும் சேவகன் கடமையினின்றும் மாணவர் கலாசாலையிலிருந்தும் நீக்கப்பட்டனர்.

### டமஸ்காசில் உக்கிரமான கலகம்

சென்ற செவ்வாய்க்கிழமை றஸ்ஹபா என்னுமிடத்துள்ள தெருவீதிகளில் உக்கிரமான கலகம் நிகழ்ந்தது. அநேக கிராமங்கள் தீ மூட்டப்பட்டன. 300 பேர் இறந்தனர். பல கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இடைவீடின்றி நிகழும் கலகங்கள் காரணமாக டமக்காஸ் என்னுமிடத்திலும் அங்குள்ள சான்ஜாக் என்னுமிடத்திலும் இராணுவச் சட்டம் அநுசரிக்கப்பட்டிருக்கிறது.

### இராணி மாளிகையில் விவாகம்.

எட்டியாந்தோட்டையிலே உடபேச் தோட்டத் தலைவராகிய மிஸ்டர் பீ. ரீ. உவோர்தின்டன் அவர்களுக்கும், எமது பிரதிதேசாதிபதியின் ஏகபுத்திரி மிஸ் எலினோர் யோசிப்பின் அலெக்சாண்டருக்கும் இந்த நவம்பர் மீ 21உ சனிக்கிழமை சென்பீற்றேர்ஸ் சேர்ச்சில் விவாகம் நடைபெற்றது. இராணி அலெக்ஜாண்டிறாவின் தேகவியோகம் காரணமாக விசேட கொண்டாட்டங்களில்லாதொழிந்தன.

### ஐரோப்பிய தோட்டத் தலைவருக்கு இருபத்தைந்துரூபா அபராதம்.

மிஸ்டர் எஸ். எஸ். மேசன்என்னும் ஐரோப்பிய தோட்டக்காரர் ஒருவர் தமது மோட்டர் வண்டியைக் கண்டி நகரவீதியிலே ஒரு மணித்தியாலம் முப்பது மைல் விகிதமாகச் செலுத்திச் சென்றாரெனக் கண்டிப் பொலிஸ் கோட்டிற் குற்றஞ் சாட்டப்பட்டனர். எதிரி குற்றவாளியெனக் கூறினமையினால் இருபத்தைந்து ரூபா அபராதம் விதிக்கப்பெற்றனர்.

### சியம் அரசர் இறந்தனர்.

சியம் தேச அரசர் தமது வயிற்றிலுண்டான நோய்காரணமாகச் சென்ற வியாழக்கிழமை அதிகாலையில் இறந்தனர். அரசரின் இளைய சகோதரராகிய பிருச்சாதிப்போக் இளவரசர் அரசர் பதவியை எய்தினர்.

### ஒரு ஐரோப்பியர் தங்கக் கட்டியைத் திருடியமை.

இந்தியாவிலே வடமேற்குப் புகைரதக் காவலனாகிய டபிள்யு. எவ். பிரில்ஸ் என்னும் ஒருவர் புகைரதமார்க்கமாக அனுப்பிய தங்கக் கட்டியைத் திருடியபோது இரகசியப்பொலீசாரற்பிடிக்கப்பட்டனர்.

### சான்டோ இறந்தமைக்குக்காரணம்.

சான்டோ ஒரு மோட்டர் வண்டியிற் பிரயாணஞ் செய்தபோது வண்டி ஓர் பள்ளத்தில்வீழ்ந்தது. சான்டோ தானே வேறொருவரின் உதவியின்றி வண்டியைத் தூக்கித் தெருவில்வைத்தனர். அளவுக்கு மிஞ்சிய சக்தியை உபயோகித்தமையினால் மண்டையிலுள்ள இரத்தக் குழாய்கள் வெடித்தமையே அவரது மரணத்துக்குக் காரணமாம்.

### கடலில்மூழ்கிய இருபாய் மரக்கலம்.

16 பேர் கடலிற் கஷ்டமுற்றனர்.

சில நாட்களுக்குமுன் பம்பாயிலிருந்து றங்கூனுக்குச் சென்ற இருபாய் மரக்கலம் ஒன்று உக்கிரமான புயலிலகப்பட்டு ஆழிவாய்ப்பட்டது. அம்மரக்கலத்திற் பிரயாணஞ் செய்தோருள் பதினறுபேர் பலகைகளைப் பிடித்துக்கொண்டு இருநாட்களாகக் கடலிற் கஷ்டமுற்றனர். அவ்வழியாகச் சென்ற "மாசிரு" என்னும் புகைக்கப்பல் அவர்களைமீட்டுக்கொண்டு சென்ற வெள்ளிக்கிழமை காலை கொழும்புக்கு வந்தது.

### இரணைமடுக் கொலைவழக்கு

சென்ற செவ்வாய்க்கிழமை இரணைமடுக் கொலை வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதியவர்களால் விசாரணை செய்யப்பட்டது. 'அற்றேணி ஜெனறல்'லுடைய கட்டளைப்பிரகாரம் சாவகச்சேரி பருத்தித்துறைப் பொலிஸ் நீதிபதியாகிய மிஸ்டர் எம். ஏச். கன்ரவாலா அவர்களுடைய சாட்சி விசாரணை செய்யப்பட்டது. மிஸ்டர் கன்ரவாலா அவர்கள் சென்ற ஜூன் மாதம் 6உ தொடக்கம் நிகழ்ந்த சம்பவங்களையெல்லாம் விரித்துக் கூறினர். இவ்வழக்கு டிசெம்பர்மீ 4உ தவணையிடப்பட்டிருக்கிறது.

### அறிவித்தல்

இத்தால் சகலரும் அறியவேண்டியது அராலி கிழக்கு கந்தையா செல்லத்துரை பெண் செல்வநாயகி அம்மா ரூபா 3475/= பெறுமதியான பின்னுஞ் சொல்லப்படும் ஆதனங்களைப் பின்வைத்து 1910ம் ஆ ஆடிமீ 22-ம்உ யாதொரு மரணசாதனமு மெழுதி வையாது காலஞ்சென்று விட்டாரென்றும் அவரின் ஆதனத்துக்கு உரிமைக்காரியாயிருப்பது, சங்கானை வடலியடைப்பு பொன்னம்பலம் பெண் உண்ணாமலை அம்மா வென்றும், காலஞ்சென்றவரின் ஆதனத்துக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T/426 ம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கின் பிரகாரம், மேற்கூறிய உரிமைக்காரி உண்ணாமலை அம்மாவின் சகோதரன் தாவடி பெரியதம்பி சிவசிதம்பரம் ஆகிய நான் தத்துவம் எடுக்கின்றேனென்றும், அவ்வாதனத்துக்கு உண்ணாமலை அம்மாவைத் தவிர சொந்தம் உள்ளவர்கள் வேறெருவரில்லை யென்றும் அவ்விதமன்றி ஆரேனும் குறித்த ஆதனத்தில் எவற்றையாவது எவ்விதத்திலேனும் பாரித்து அல்லது பராதீனப்படுத்தியிருந்தால் அவை பெலப்பற்றதாக எண்ணிக்கொள்ளப்படுமென்றும் மேற்கூறியபடி தத்துவமெடுத்து முடியும் வரையில் காலஞ்சென்றவரினுதனத்துக்குரிய எவ்வித அசைவற்ற அல்லது அசைவுள்ள பொருட்களையும் எவரேனும் மாறுபாடு செய்யக்கூடாதென்றும் அவ்விதஞ் செய்யின் நியாயஸ்தலத்தில் பிராது தொடரப்படுமென்றும் இத்தால் யாவருக்கும் தெரியப்படுத்துகிறேன்.

ஆதனங்கள்.

1. அராலி கிழக்கு இறை ஆட்டேப்பட்டியும் மறுபிரிவும் பரநிஇல 7ம் அதைச்சேர்ந்த வீடு, அடுக்களை, வான்பயிர் செய்பயிர் முதலியவனைத்தும்
2. ஷை இறை "ஆட்டேப்பட்டியும் மறுபிரிவும்" பரநிஇல 3ம் கிணறும் மற்றுமதைச் சேர்ந்தவைகளும்
3. ஷை இறை "கிழவானை கம்பன்புலோ" பரநெல் இல 10ம் துளி 1½ பும் கிணறும் மற்றுமதைச் சேர்ந்தவைகளும்
4. ஷை இறை கம்பன்புலோவும் மறுபிரிவும் பரநெல் இல 12½ம் அதைச் சேர்ந்தவைகளும்
5. ஷை இறை "புங்கடியயல்" பரநெல் இல 4½ம் அதைச் சேர்ந்தவைகளும்
6. ஷை இறை "கிழவானை" பரநெல் இல 12ம் அதைச் சேர்ந்தவைகளும்
7. ஷை இறை "கோத்தியாமணல்" பரநெல் இல 10ம் அதைச் சேர்ந்தவைகளும்

(Mis 759) பெ. சிவசிதம்பரம்.

### பெற்ற பிள்ளைகளை எரித்துக்கொன்றவன்.

இந்தியாவிலே ஜாவேலி என்னும் கிராமத்திலுள்ள ஒருவன் தன் மனைவி இறந்தபின் வேறொரு பெண்ணை வைத்திருந்தான். பிந்திவந்தவள் அவனுடைய பத்துவயதுப் பிள்ளையையும் ஐந்து வயதுக் குழந்தையையும் நிஷ்டூரமாக நடத்தியமையினால் குறித்த நீசன் அப்பெண்ணைத் துரத்தியபின், பிள்ளைகளின் கஷ்டத்தை நீக்கும்பொருட்டு இருவரையும் எரித்துக் கொன்றனன். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபின் ஷை தண்டனை தீவாந்தர சிட்சையாக மாற்றப்பட்டது.

### புதிய கைத்தொழில்

சிங்களவர்கைத்தொழிலைவிருத்தி செய்வதிற் கண்ணுங் கருத்துமாக விருக்கிறார்கள். சென்ற செவ்வாய்க்கிழமை கண்டியிலுள்ள நகரமண்டபத்திலே மத்தியமாகாண ஏசண்டர் கௌரவ மிஸ்டர் டபிள்யு. என். டின்டர்லி அவர்களது தலைமையின்கீழ் ஓர் விசேஷ கூட்டம் நடைபெற்றது. மிஸ்டர் எவ். பீ. எவ். மென்டிஸ் என்னும் ஒருவர் பப்பாப்பழங்களிலிருந்து செய்யப்பட்ட புதிய இருபத்திரண்டுவித பணிகாரங்களை அக்கூட்டத்திற் காட்டினர். அவை அதிக ருசியுள்ளனவாயும் திறமையுடையனவாயும் காணப்பட்டன. சபையோர் அவற்றைப் பெரிதும் சன்மானித்தனர். இத்தொழில் விருத்தியாகுமேல் அநேகர் அதிக வருவாய் பெறுவரென்றும் நாடு விருத்தியாகுமென்றும் இப்பணிகாரங்களை மேல்நாட்டார் அமெரிக்கர் முதலினோர் அதிகமாக விரும்புவரென்றும் அக்கூட்டத் தலைவர் கூறினர். இக்கைத்தொழில் விருத்தியின் பொருட்டு ஓர் விசேட சபை அதிவிரைவில் அமைக்கப்படுமெனச் சொல்லப்படுகின்றது.

### உரிமைபற்றி நிகழ்ந்த கலகம்.

இடையிற் புகுந்தசாராயம் இருவரையும் வேறுபடுத்தியது.

சிலாபத்துக்குச் சமீபமாயுள்ள ஒரு கிராமத்திலே மார்தினு, அலோசியஸ் என்னும் இருவர் அங்குள்ள ஒருபெண்ணிடம் உரிமை பூண்டிருந்தனர். சென்ற சிலநாட்களுக்கு முன் இந்த இருவரும் அங்குள்ள சாராயத்தவறணைக்குச் சென்று ஒற்றுமையுடன் சாராயத்தைக் குடித்தார்கள், சிறிது வேளைசம்பாஷித்தபின் மீண்டும் சாராயத்தைக் குடித்தார்கள். பின்னே புகுந்த சாராயம் முன்னே புகுந்த சாராயத்துடன் கூடி அப்பெண்ணுக்கு உரியவர் ஒருவரன்றி இருவரும் உரிமையாதல் கூடாதென்னும் விஷயமாக ஆரம்பித்தனர். அது இருவருக்குள் மனஸ்தாபத்தை உண்டாக்கியது இருவரும் அப்பெண்ணின் பூரண சுதந்தரத்தைத் தனித்தனி பெறவேண்டிக் கலாமிட்டனர். ஈற்றில் அலோசியஸ் என்பவன் கத்தியினால் மார்தினுவைக் குத்தமுயன்றான் மார்தினு கத்தியைக்கண்டு அஞ்சிப்புறமிட்டு ஓடினான் அலோசியஸ் அவனைப் பின்தொடர்ந்தான் கத்திக்குத்துக்கு அகப்படாமல் தப்புதல் அரிதெனக்கண்ட மார்தினு ஆற்றிற்குதித்தான். அலோசியஸ் தானும் ஆற்றிற் குதித்து மார்தினுவின் முதுகிற் படுகாயமுறக்குத்தினான். அங்குச்சென்றோர் அவன் ஆற்றில் மூழ்கி இறவாவண்ணம் காப்பாற்றினர். மார்தினு ஓடி மறைந்தனன்; அவன் இன்னும் பொலீசாரால் பிடிபட்டிலன்.

### நகை அடைவுபிடிப்பவரின் அருந்தப்பு.

11,900 ரூபாவைக் காப்பாற்றிய தந்திரம்.

சில நாட்களுக்கு முன் வெலம்பிட்டியாவிலே குறிஞ்சிவதலை என்னுமிடத்தில் ஆயுதபாணிகளான ஒரு கள்வர் கூட்டம் பஸ் வண்டி ஒன்றை வழிமறித்துச் சூறையிட்ட வழக்கு, சென்ற வியாழக்கிழமை கொழும்புச் சுப்பிறீங் கோட்டிலே விசாரணை செய்யப்பட்டது எதிரிகளுள் ஐவர் பொலிஸ்கோட்டுக்குக் கொண்டு வரப்பட்டனர். முதலாவதாக றக்குவானையில் அடைவுபிடிப்பவராகிய ஆறுமுகமென்னும் ஒருவருடைய சாட்சி விசாரணை செய்யப்பட்டது. அவர் கூறியதாவது:- "நான் குறித்த தினத்திலே அந்தப் பஸ்வண்டியிற் பிரயாணஞ் செய்தேன். அப்பொழுது என்னிடத்தில் 20 தங்கப்பவுன் பத்துரூபா நோட்டுகள் ஐந்துரூபா நோட்டுகள் எல்லாமாக 11,900 ரூபா இருந்தது. கள்வர் பஸ்வண்டியை வழிமறித்தபோது நான் உடனே வண்டியைவிட்டு இறங்கி ஓடமுயன்றேன், கள்வருள் ஒருவன் என்னிடமுள்ள பையைப் பறித்தெடுத்தான், அப்பைக்குள் சில்லறையல்லாமல் வேறொன்றுமில்லையென்று உரத்துக்கதறினேன். ஒருவன் அப்பையைத் திறந்துபார்த்தான், என் அதிஷ்டவசமாக பைக்குள் மேலே இரண்டு சீலைகள் இருந்தன. அந்த இரண்டு சீலைகளுக்கும் கீழே தான் என்னுடைய 11,900 ரூபாவும் இருந்தது. நான் உரத்துக்கூறிய சொல்லில் நம்பிக்கைவைத்த திருடன் சீலைகளைக் கண்டவுடன் அதனுட் பணமில்லையென நினைத்துப் பையை என்னிடம் கொடுத்துத் தனக்கேதும் 'சந்தோஷம்' கொடுக்கும்படி கேட்டான் மடியிலிருந்த ஒரு ரூபாவை எடுத்து அவனிடம் கொடுத்து அதிவிரைவாக ஓடமுயன்றேன், அங்கிருந்து கொழும்பு வரையும் விரைவாக ஓடிவந்து இடையில் அகப்பட்ட ஒரு றிக்ஷோவண்டியிலேறி வீட்டை அடைந்தேன். பணத்தைக் காப்பாற்றவேண்டுமெனபதில் அதிக கண்ணும் கருத்துமாயிருந்தமையினால் எனது பையைத் திறந்துபார்த்த கள்வன் இந்த எதிரிகளுள் யாரென்பதைச் சொல்லமுடியவில்லை கள்வர் கத்தி பொல் முதலான ஆயுதங்களுடன் வழிமறித்தமையை நான் நேரிற் கண்டேன்" எனப்பகர்ந்தார். வழக்கு வருகிற டிசெம்பர்மாதம் மூன்றாந்திகதி தவணையிடப்பட்டிருக்கிறது.

### தேகவியோகம்

புலோலிச் சைவாங்கில வித்தியாசாலையில் உதவி ஆசிரியராகவிருக்கும் ஸ்ரீ வி. சுப்பிரமணியமவர்களின் மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீ. வி. கந்தையா அவர்களின் புத்திரியுமான ஸ்ரீமதி இராசலட்சுமி அம்மாள் காத்திராப்பிரகாரம் நேர்ந்த நோய்காரணமாகத் தமது இருபத்தோன்பதாவது வயதில் இந்த நவம்பர்மாதம் 16உ திங்கட்கிழமை தேகவியோகமாயினரென்றுந் துக்கசமாசாரத்தை அறியலானோம்.

### யாழ்ப்பாண உதைபந்தாட்ட வீரர்.

இவ்வருடம் நடைபெற்ற பந்தயஆட்டங்களிலே மானிப்பாய்ச் சைவவித்தியாசாலை மாணவர்கள், இரண்டு கல்லூரிகோடு சமனுகவின்றும், ஏனைய நாலு கல்லூரிகளை வென்றும் 12க்குப் 10 புள்ளிகள் பெற்றும் முதன்மையடைந்து "யாழ்ப்பாண உதைபந்தாட்ட வீரர்" என்னும் பட்டம் எல்லாம் வல்ல இறைவனருளாலே பெற்றனர். "எல்லாம் சிவன் செயல் ஆதலினாலே நாம் வீண்பெருமை பாராட்டக்கூடாது" என்று நினைந்து வழியிலே மூத்தநயினாரைத்தரிசித்துக்கொண்டு, மேளவாத்தியத்துடன் கல்லூரிக்குச் சென்று, அங்கே பிரதமாசிரியரவர்கள் ஸ்ரீநடராஜப் பெருமானுக்குப் பூசை செய்வித்துப் பிரசாத முதலியன வழங்குவித்த பின்னர், அன்று காலை மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும் பொருட்டுப் "புறநானூறு" என்னும் பண்டைச் சங்க நூலிலிருந்து 'ஈன்றுபுறந்தருதலென் றலைக்கடனே' என்னுஞ் செய்யுளைப் பீடிகையாகக்கொண்டு பேசிய 'பண்டைத் தமிழர்வீரம்' என்னும் விஷயத்தையே மாணவர்களுக்கு வீரம்மென்மேலும் பெருக்க நினைந்து பின்னரும் பேசத் தொடங்கி, 'ஒளிறு வாளருஞ்சமமுருக்கிக் களிறெறிந்துபெயர்தல் காளைக்குக் கடனே' என்பதை மிகவும் விரித்துக் கூறினார். மாணவரனைவரும் அமைதியோடிருந்து கேட்ட பின்னர், தேவாரபாராயணஞ் செய்துகொண்டு குதூகலத்துடன் தத்தம் இல்லமேகினர்.

கடித.

### கமக்காரின் திகில்.

சென்ற சில வருஷங்களாக ஊரெழு உரும்பராய் முதலிய இடங்களிலே மாரிக்காலத்தில் கமக்காரர் தங்கள் தோட்டத்துத் தொட்டிலிற் கட்டிவைத்திருக்கும் ஆடுமாடுகளை ஏதோ ஒரு மிருகம் கொலைசெய்து தின்று வருகிறது. ஒவ்வொருவருஷமும் மாரிக்காலமுந் தொடங்க இந்த மிருகத்தின் கொடுமையும் தொடங்கி விடுகிறது. தைமாசிவந்தவுடன் இதன் சமாசாரம் தெரியவருகிறதில்லை.

இதுகாலவரையிலும் அந்த மிருகத்தினாற் கொல்லப்பட்டமாடுகள் நூற்றுக்கணக்கென்று சொல்லுகிறார்கள். அந்த மிருகத்தின் செயல்களோவிகவும் அதனமானவை. ஒருமுறை போய்க் கடித்துத்தின்ற இடத்திற்கு திரும்பவும் அது போவதில்லை. இதுபுலி, சிறுத்தை, வெருகு, அல்லது சருகுபுலி யாயிருக்கலாமென்று கமக்காரரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். இதன் உறைவிடமெங்கிருக்கலாமெனக் கண்டுபிடிப்பதற்குப்பலமுயற்சிகள் செய்தும் பயன்படவில்லை. அதின் ஆயுளை இக்கோடு முடிக்கின்றோமென்று பலரி ஆவேசம் கொண்டும் அநுகூலப்படவில்லை.

அம்மிருகத்தினால் கடிபட்டுச் செத்த ஒரு மாட்டை ஒருமுறை அதுசெத்துக்கிடந்தவிடத்திலேயே விட்டுக் காவலுமிருந்தார்கள். அதுவுமோ அந்தஇடத்தையெட்டியும்பார்க்கவில்லை விடியுமுன் ½ மைலுக்கப்பாலுள்ள தோட்டத்தில் ஒருமாட்டைத் தின்றுவிட்டதான செய்தி வெளிப்பட்டது. அதன் செய்கைகள் மிகவும் அதனமாயிருக்கின்றன. இரவிற் பனியிலும் மழைக்காற்றிலும் தங்கள் மாடுகளைக் காக்கும் வண்ணமாக ஒவ்வொருவரும் சத்தம் மாட்டுப்பட்டிகளுக்கு விழிப்பாளர்களை வைத்துப்பாதுகாக்கவேண்டியிருக்கிறது,

அம்மிருகத்தினாற் கொல்லப்பட்ட ஒரு மாட்டைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி ஒரு தோட்டத்திற்குப்போனேன். ஒன்பதுமாசக் குலையுடைய ஒரு கறுத்தப்பசு பிரேதமாகக் கிடந்தது. மாட்டுக்காரனும் மனைவியும் மாரளவு கண்ணீர் சொரிந்து நின்றார்கள். ஒரு நாயின அடிகளைப்போலவே பக்கங்களில் பதியப்பட்ட சில அடையாளங்கள் தென்பட்டன. மாட்டின் தல்லீர்ச்சள்ளைப்பக்கமாக ½ அடி அகலமுள்ள ஒருவட்டமான துவாரம்தெரிந்தது. தென்பட்ட எலும்புகளையும் தன் கூரிய பற்களால் கடித்து இவ்வகையான பாதையை உண்டாக்கி உள்ளே உள்ள குடல் ஈரல் முதலியன முழுவதையும் எடுத்துத் தின்றுவிட்டதாகத் தெரிந்தது. மாட்டின ஜீவனைப் போக்கியபின்தான இப்படிச்செய்ததோ அல்லது இச்செய்கையாற்றான் உயிர்துறந்ததோ தெரியவில்லை. ஆனால் இந்த மிருகம் மாட்டின் முதுகில் தொற்றி ஏறியிருந்து கொண்டே இப்படியான வேலையைச் செய்திருக்க வேண்டுமென்று சிலர் விளங்கப்படுத்தினார்கள். எனெனில் மிருகத்தைக்கண்டு மாடு சந்தடிசெய்த அடையாளம் ஒன்றுங்காணப்படவில்லை,

மேலும் இந்த வருஷமும் அந்தமிருகம தலைகாட்டிக்கொண்டதாகவும் பலமாடுகளைக்கொன்றுவிட்டதாகவும் அறியலானோம். கமக்காரர் படும் கஷ்டத்தைக் கடவுளேயறிவர். மாடுகளின் ஜீவனை இவ்வளவு இம்சைப்படுத்தும் அந்தமிருகத்தைக் கண்டுபிடிக்க ஊரவர்கள் ஒருங்குசேர்ந்து இரண்டு மூன்று நாட்களாக விடாமுயற்சி செய்துபார்ப்பார்களாக.

க. சு.

## சுத்தமான காற்றினால் வரும் பயன்.

தொடக்கத்திலேயே க்ஷயரோக வியாதிக்கு மருந்து செய்வித்துக்கொண்டால் நூற்றுக்கு 85 விகிதமானோரின் நோயைத் தடுக்க அல்லது மாற்றக் கூடும். அவர்கள் மறுபடியும் வழக்கம்போல் தங்கள் தங்கள் முயற்சிகளைப் பார்க்கக்கூடியவர்களாயிருப்பார்கள்.

இது எப்படிச் செய்யக்கூடும்?

1. ஏற்கெனவே டாக்குத்தருக்குக் காட்டி அவர் சொல்லுகிற புத்திமதிகளை அநுசரித்து நடக்கிறதாலும்,
2. சுத்தமான காற்று, சூரியவெளிச்சம், நல்ல உணவு, போதிய ஆறுதல், மனச் சந்தோஷம் முதலிய இவைகள் க்ஷயரோக வியாதிக்கு வைத்தியஞ் செய்விக்கும்போது கவனிக்கப்படவேண்டிய முக்கிய காரியங்கள் என்பதாக உணர்ந்துகொள்ளுவதாலும்,
3. க்ஷயரோகத்தை மாற்றுகிறதற்குச் சரியான மருந்துவகைகள் பாய்ச்சுமருந்துகள் முதலியன ஒன்றும் கிடையாது என்பதை கினைத்துக்கொள்ளுவதாலும்,
4. மேலும் இவ்வியாதி உண்டுபடுங் காலத்தில் அதற்கு வைத்தியஞ்செய்விக்கிறதற்குச் சரியான இடம் ஒரு சுகாதாரசாலைதான். சகலவிதமான வீட்டிற் செலவுக்கும் இயல்பில்லாதவர்களுக்கு இதுவே மிகவுந் தகுந்த இடம். கொஞ்ச காலைக்குத்தானும் இந்த ஆரோக்கியசாலையி லிருந்தால் பெரும் நன்மை உண்டாகும். ஏனென்றால் இங்கே நோயாளி தான் சரியாக நடக்கவேண்டிய விதிமுறைகளைச் சரியாகஅறிந்துகொள்ளுகிறான்.
5. நோயாளி தன்னுடைய வீட்டிலே இருந்துகொண்டு மருந்து செய்விக்கவேண்டுமென்றால் டாக்குத்தர் சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொரு புத்திமதியையும் தவறாமல் சரிவரச் செய்துவரவேண்டும். கூடியளவு வெளியான இடங்களில் காற்றுப் பிடிக்க உலாவி வரவேண்டும். வெளியில் நித்திரை செய்தல் வேண்டும். நீ பட்டினத்திலிருந்தாலுஞ்சரி அல்லது நாட்டுப்பக்கத்திலிருந்தாலுஞ்சரி இம்முறைகளையும் புத்திமதியையும் அநுசரித்து நடப்பாயானால் உன்நோய் சுகமாய்விடும். காலசுவாத்தியத்தைப்பற்றி அக்கறையில்லை. க்ஷயரோக வியாதி எந்தவிடத்திலும் தொற்றிப் பிடிக்கும்; எந்தவிடத்திலும் மாறிப்போகும்.
6. நோயின் மும்முரம் தணிந்துவிட்டதென்று அறிந்தவுடனே நோயாளி மிகவும் கவனமாகத் தன்சீவியத்தை நடத்தவேண்டும்.
7. க்ஷயரோக வியாதி உள்ளவர்கள் தாங்கள் மற்றவர்களில் இலகுவாகத் தொற்றிப் பிடிக்கக்கூடிய வியாதியால் வருந்துகிறார்கள் என்பதை மறந்துபோகக்கூடாது. இருமும்பொழுது அல்லது தும்மும்பொழுது தங்கள்மூலமாய் மற்றவர்களுக்கு நோய் தொற்றுவண்ணம் கவனமாய் நடந்துகொள்ளவேண்டும். இருமும்பொழுது உன்வாயைக் கையினால் மூடு. க்ஷயரோகவ்யாதிமாறுகிறதற்குச்சரியானமார்க்கம்ஒன்றுமில்லை அதற்குப் பொறுமையும், விடாமுயற்சியும், மனஉற்சாகமுந்தான் தேவை. இவ்வருத்தம் மாறுகிறதாயிருந்தால் டாகுத்தர் சொல்லுகிறபடி நோயாளி நடக்கவேண்டும்.

## நோக்கமில்லாக் கல்வி.

இக்காலம் நம்மவரிற் பெரும்பான்மையோர், ஆங்கிலமே ஜீவ போஷணைக்கு இன்றியமையாத கல்வியென நம்பித் தம் பிள்ளைகட்குத் தமிழைச் சரிவரக் கற்பியாது இளமையிலேயே ஆங்கிலங் கற்பித்து வருகின்றனர். ஆனால் ஆங்கில வித்தியாசாலைகளில் சம்பளமோ வருடா வருடம் ஏறிக்கொண்டு வருகிறது. ஆங்கில வித்தியாசாலைக்குப் போகும் நம் சிறுவர்களின் உடைக்கும் பள்ளிக்கூட வேதனத்திற்கும் மற்றைய செலவுக்கும் சராசரி ரூபா 10. மாசமொன்றுக்கு வேண்டியிருக்கிறது. அன்றியும் வீட்டில் பிள்ளைகட்குப் படிப்பில் கவனஞ் செல்லாததை யறிந்து பெற்றோர் ஓர் உபாத்தியாயரை 10 ரூபாவுக்குக் குறைவுபடா வேதனத்தில் அமர்த்தவும் வேண்டியவர்களாகின்றார்கள். ஆகவே ஒரு பிள்ளையின் ஆங்கிலப்படிப்பால் பெற்றோர்கள் ரூபா 20 மாசமொன்றுக்குச் செலவிடவேண்டும். அவ்விதம் வருடமொன்றுக்கு ரூபா 240 குறைந்த பட்சம் எட்டு வருடப் படிப்புக்கு 1920 ரூபாவும் செலவிடவேண்டியவர்களாகின்றார்கள். இத்தனை செலவில் எட்டாம் வகுப்பிற் படித்துத் தேறியதும் உத்தியோகத்தைத் தேடி மனச் சோர்வுடனும் முகவாட்டத்துடனும் அலையும் வாலிபர்களின் நிலைமையை நோக்கிற் பரிதாபம்! பரிதாபம் !!

இத்தனை காலமும் தம் பெற்றோரிட்ட உணவையுண்டு, வித்தியாசாலைகளில் தம் பாடங்களை யொப்புவித்துத் திரும்பியதும், பந்தாடுவதே தமது முழு நோக்கமாகக்கொண்டு நேரத்தை மிகவும் இன்பமாகக் கழித்து வாழ்ந்துவந்த இவர், தம் பொறுப்பை யுணர்ந்ததும் ஏதாவது தம் ஜீவனோபாயத்திற்கு ஓர் சிறு உத்தியோகமாவது அகப்படுமோவென ஓடித்தேடினால், யாதும் கிட்டுவதில்லை. எந்த "டிப்பாட்மெண்டி"ல் ஓர் பதவிக்கு விண்ணப்பஞ் செய்தாலும் இடமில்லை என்கிறார்கள். இவ்வாலிபர்தான் என செய்வார்கள். பார்த்தால் உத்தியோகம் இன்றேல் பட்டினியே கிடக்க நேரிடுகின்றது.

இவர்கட்கு எழுத்துவேலை தெரியும், கைத்தொழில் தெரியாது. ஆங்கிலத்திற் கடிதமெழுத முடியும், ஓர் விஷயத்தைப் பிழையற எழுதுமாற்றல் இவர்க்கில்லை. வெளிநாளில் பத்தாவதில் முழுக்கருத்துமே யன்றிக் கமத்தொழில், வியாபாரம், கைத்தொழில் முதலியனவற்றின் ஞானமே கிடையாது. இவர்களின் கதி யிருந்தவாறென்னை! இவையன்றோ நம்மவர் ஆங்கிலக்கல்வியினால் அடைந்தபேறு!

இற்றைக்குச் சில வருடங்களாக "உத்தியோகமில்லாத் திண்டாட்டம்" என்னும் வசனம் ஆங்கிலங் கற்ற வாலிபர் அனேகரின் வாயில் நின்று பிறப்பதைக் காணலாம். உத்தியோகம் ஒரு சிலருக்கன்றி ஊராயிரவருக்கும் எவ்வாறு அகப்படும். உத்தியோகங்களைக் கைப்பற்றினவர்கள் அதிட்டசாலிகள் தான். ஆனால் மற்றவர்கள் உத்தியோகங் கிடையாவிட்டால் இறந்துபோவதா? இல்லை, இல்லை. ஒவ்வொருவரும் தத்தம் புத்திக்கெட்டிய வரையில் தம் நிலைபாத்துக்குத்தக்க வியாபாரமோ, கைத்தொழிலோ, வேளாண்மையோ செய்து தமது சீவியத்தை இன்பமாய்ப் போக்கவும் தந்தாய் நாட்டின் செல்வாக்கை அதிகரிக்கவுமன்றோ முயலல் வேண்டும்.

அன்றிப் பணச் செழிப்பற்று வறுமையை எக்நேரமும் எதிர்பார்த்திருக்கும் இந்நாட்களில் ஆங்கிலம் அரைகுறையாய்க் கற்றறிந்த வாலிபரிற் சிலர் நாலுபக்கமும் உத்தியோகபேட்சை கொண்டு ஓடித்திரிந்து, அலுத்து, இறுதியில் தம் பெற்றோர் இரத்தம் பிழிந்து தேடிவைத்த சொத்துக்களை யெல்லாம் ஈடுவைத்தோ, விற்றோ, ஸவராவி ஆட்கொல்லி என வழங்கப்படும் மோட்டார் யமன்களை ஆவலுடன் ரூபா இரண்டாயிரம், மூவாயிரம், நாலாயிரம் எனக் கொடுத்து விலைக்கு வாங்கி, நான்கு வருடமோ, ஐந்து வருடமோ ஓடியாடி இடையிடையே உயிர்ச் சேதங்கள் பல நிகழ்த்தி, வேலிகள், சுற்றுமதில்கள், வீடுகள் முதலியனவுடன் சமர்புரிய விடுகின்றனர். அதனால் தம் மோட்டர் வண்டிகட்குச் சேதத்தை யுண்டுபண்ணுவதல்லாமலும் பொருளுடையோர் நட்டப் பணமுமிறுக்கவேண்டியவர்களாகின்றார்கள்.

இதமட்டோ! இவ்வைந்தாறு வருடங்களிலும் தம் பசிப்பிணியை அகற்றக் கருதிய எம் வாலிபர் எவ்விதம் இலங்காதேவியின் சற்புத்திரராம்! கமக்காரர், கைத்தொழிலாளர் ஆதியோர் தேடும் பணத்தை ஏமாற்றிப் பறித்து இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய அன்னிய தேசங்கட்கு மோட்டர்வண்டியின் பொருட்டும் அவற்றை யியக்கும் எண்ணெயின் பொருட்டும் வண்டியின் ருத்திரங்களின் பொருட்டும் வாரி வாரி இறைக்கின்றார்கள் என்பதை அறிந்தால் ஒரு பொழுதும் இவ்வித மதியற்ற தொழிலில் ஈடுபட மாட்டார் என்பது நிச்சயம். [illegible] தேசத்திலிருந்து, பலதுறைகளாலும் [illegible] பூர்களுக்குச் செல்லும் பணத்தொ[illegible]யிற் காற்பங்காவது அங்கிருந்து வருகின்றதா?

எமது நாட்டின் செல்வாக்கும் வறுமையும் எம் வாலிபர்களிலன்றோ தங்கிக் கிடக்கின்றது. இவர்கள் சோம்பேறிகளாய், தம்மில் நம்பிக்கையற்றவர்களாய், நன்னோக்க மில்லாதவர்களாய், நடைப்பிணங்களாய், தம்மை மீன்று அதிக சிரமத்துடன் பெற்று வளர்த்துக் கல்வி புகட்டி இனிமேல் எம் வறுமை இன்று நீங்கும், நாளை நீங்கும் என மனப்பால் குடிக்கும் பெற்றோர்க்குப் பெருஞ் சுமைகளாய், கவலைக் களஞ்சியமாய் இருப்பின் எவ்வாறு எமது வறுமை நீங்கிடும்? ஊராரின்புற்று மகிழ்ந்திடுவர்? நாடு செழிப்புறும்?

எம் நாடு எவ்வாறு செழிப்புறுமெனின், உத்தியோகத்தினாலன்று. நன்மக்கள் ஒவ்வொருவரின் விடாமுயற்சியினால் தாம் தமக்கு வேண்டியவற்றைத் தாமே யுண்டுபண்ணித் தமது பணத்தைக் கூடிய வரை வெளிநாடுகட்குப் போகாது தடுத்தலினாலன்றோ. நாம் கல்வி கற்பது அறிவு வளர்ச்சிக்கே யன்றி உத்தியோகத்தின் பொருட்டன்று. கற்றவர்களில் ஆற்றொருவரேயன்றி ஏனையோர் கல்வியினுதவி கொண்டு தம் வருவாய்களை அதிகரிக்க வியலாது. ஆகையால் நாம் எமது உணவுப் பொருள்களை அதிகப்படுத்துந் துறைகளிலும் கைத்தொழில் முறைகளிலும் எமது நோக்கத்தைச் செலுத்த வேண்டும். முதலாளிகள் என்ற நினைவை எமது மனதினின்றும் ஓட்டவேண்டும். பின் நாம் விவசாயம், கைத்தொழில் முதலியன செய்தற்கு ஏற்றவராவோம்.

ஆகையால் இதைக் கண்ணுறும் அறிவாளிகள் தம் பிள்ளைகள் ஒரு வேலையுமின்றி வீண் நேரம் போக்குவதினால் தம்மூரிலிருந்து உணவுப்பொருள் உடை முதலியன வின் பொருட்டு வெளித்தேசங்கட்குத் தமது பணம் ஒவ்வொரு நிமிஷமும் செலவாகிற தென்பதை அறியாரோர். ஆனதுபற்றி உத்தியோக வேட்கையிற் பதிந்திருக்கும் நம் வாலிபரின் மனத்தைத் திருத்தி வேளாண்மை, கைத்தொழில், வியாபாரம் முதலியனவற்றில் செலுத்தும்படி செய்வாராக.

இங்ஙனம்,
ஓர் நன்மை விரும்பி.


### "சேலம் பனியன்கள்."

உறுதியானது; விலை சரசம்.

நாட்பட உழைக்கக்கூடியது.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரொயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
(H. 40) S. இந்தியா.



### விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் காட்டேசன்டுத்துரை அவர்களால் பின்னால் சொல்லப்படுமிடங்களில் விற்கப்படும்.

கிளிநொச்சி மரக்காலையில் இவ்வாண்டு மார்கழிம் 2உ புதன்கிழமைகாலை 9 மணிக்கு விற்கும் மரங்கள்.

6 முதிரைமரங்கள்
36 பாலைமரங்கள்

யாழ்ப்பாணம் விநதுகாலையில் இவ்வாண்டு மார்கழிம் 3உ வியாழக்கிழமை காலை 9:30 மணிக்கு விற்கும் மரங்கள்.

90 பாலைமரங்கள்

காங்கேசன்துறை மரக்காலையில் இவ்வாண்டு மார்கழிம் 4உ வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விற்கும் மரங்கள்.

57 முதிரைமரங்கள்.

R. M. WHITE.
கண்டி, வனபரிபாலனர்.
காட்டுக்கந்தோர்,
19உ கார்த்திகைம் 1925ஆ.
(G. 574.)



### புதிய தினுசுகள் சகாய விலைகள்
நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற் கேற்ற பனாரீஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னூடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
(Y. 39) COLOMBO.


## அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

—:O:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு ந. சு. ப. கரு. பழனிச்சாமிப்பிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ 9மீ

| நம். | தி. | ரூ. சதம் | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 827 | 2 | 50 | சண்டிக்குளி வேலுப்பிள்ளை சின்னத்தம்பி பொன்பழுது பட்டணக்காப்புச் சோடி 1 |
| 852 | 8 | 50 | சேணியதெரு ந. வீ. செல்லப்பாச்செட்டி ராமசாமிச்செட்டி பொன் பளுக்கன் சிகப்புப் பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 875 | 13 | 70 | வண்மேற்கு கதிரவேற்பிள்ளை வேதனுயகம்பிள்ளை பொன் கல்லில்லாத குறைவேலை சப்பணவளையல் சோடி 1 |
| 882 | 14 | 65 | வண்மேற்கு தம்பையா கனகரத்தினம் பொன் பட்டணங் காப்புச்சோடி 1 |
| 883 | 14 | 25 | மானிப்பாய் அம்பலம் அரியகுட்டி பொன் தகட்டுக்காப்புச்சோடி 1 |
| 884 | 15 | 90 | காரம்பன் வேலுப்பிள்ளை கந்தையா பொன் தாலிக்கொடி 1 |
| 889 | 15 | 110 | கைதடி ஆறுமுகம் சின்னத்தம்பி பொன் தாயித்துக்கோர்த்த குண்டுச்சங்கிலி 1 பட்டணங்காப்புச்சோடி 1 |
| 909 | 19 | 60 | திருநெல்வேலி விநாசித்தம்பி வல்லிபுரம் பொன் திருகில்லாத கம்பிப்பூரானட்டியல் 1இமிட் கல்வைத்த கவுத்தோர் 1 |
| 924 | 22 | 45 | கல்வியங்காடு தில்லையம்பலம் சதாசிவம் பொன் இமிட் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1 |
| 950 | 26 | 12 | பெரியகடைத்தெரு இளையதம்பி கார்த்திகேசு பொன் சாதாமோதிரம் 1 |
| 951 | 26 | 23 | உரும்பிராய் தம்பையா பரமு பொன் பழுது கம்பிப்பூரானட்டியல் 1 |
| 952 | 26 | 25 | வண்மேற்கு கதிரவேற்பிள்ளை வேதனுயகம்பிள்ளை பொன் வெள்ளித்திருகுடன் இமிட்கல்வைத்த கொண்டைப்பூ 1 வாட்சயின் 1 |
| நவம்பர்மீ. | | | |
| 984 | 3 | 100 | வண்கிழக்கு கந்தப்பர் வைத்திலிங்கம் பொன் மழுக்கன் சிகப்புப்பதக்கத்துடன் கெட்டிப்பூரானட்டியல் 1 |
| 1000 | 8 | 30 | வண்கிழக்கு அருணசலஞ்செட்டி தியாகராசச்செட்டி கெட்டி பொன் இமிட்டிம்மியுடன் சிறிய கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1006 | 9 | 280 | வண்மேற்கு கதிரவேற்பிள்ளை வேதனுயகம்பிள்ளை பொன் இரண்டு வயிரம் வைத்த பதக்கத்துடன் கல்லட்டியல் 1 |
| 1029 | 15 | 60 | ஆரியகுளம் இளையதம்பி மாணிக்கம் பொன் பிலிக்காப்புச்சோடி 1 |
| 1038 | 18 | 50 | காரைதீவு சுப்பையா கந்தையா பொன் பட்டணங்காப்புச்சோடி 1 |

விற்பனவு:— குரோதனஆ கார்த்திகை மீ 18உ (3-12-25) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகேஸ்லாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெக்கீஸ்மேஸ்தர்.
(Mis 757.)


### அதிசிரேஷ்டமான தைலம்.


காரகண்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்ந்த தைலம்

### லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூலகாரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணுய்ப்போகும் தன்மையே கிடையாது. தினையளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும் குணமுடையது.

3—L—25.




(Y. 41. A.)


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by Pandit V. T. Sambandhan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.